பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

மலர்: 20 சென்னை: ஐப்பசி 7 (23—10—72) திங்கள் வெளியூர்: ஐப்பசி 8 (24—10—72) செவ்வாய் [இதழ்: 107

## ஊராட்சிகளின் நிதி வசதி — நாவலர் தகவல்

கோவை, அக். 22—

"தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் நிதி வசதிகளைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி யோசனை கூற நிபுணர் குழு ஒன்றை மாநில அரசு அமைத்திருக்கிறது.

"ஊராட்சிகள் தாமதமின்றிப் பணிகளைச் செய்வதற்கு இயலும் வகையில் அவற்றிற்கு இன்னும் அதிக அதிகாரங்களை வழங்குவது பற்றி யோசனை கூறும்படி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது" என்று அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

# தத்துவப்போர்—தயாராவீர்— கழகத்திற்குச் சோதனைகள் மலைபோல் வந்ததுண்டு

## வேதனைகளும் சோதனைகளும் பனிபோல் அகன்றதுண்டு

### கழகத் தலைவர் கலைஞர் வேண்டுகோள்

மதுராந்தகம், அக். 23 —

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சோதனைகள் மலைபோல்வரும்; ஆனால், அந்தச் சோதனைகளும்—வேதனைகளும் பனிபோல் அகன்றுவிடும்; இப்போதும் அதே நிலைதான் ஏற்பட்டிருக்கிறது; என்றாலும், கழகத் தோழர்கள் இதற்காக வேதனையுறத் தேவையில்லை; எப்போதும்போல கழகம் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்ற முனைவீர்— இடையில் ஏற்பட்ட பிரச்சினை முடிந்துவிட்டது.

இது ஏதோ கழகத்தை ஒழிக்க எதிரிகள் நடத்தும் போராட்டம் அல்ல— ஒரு தத்துவப் போராகும்!

கழகத்தை வளர்த்திடப் பாடுபடும் தியாக உள்ளம் படைத்திருப்பவர்களுக்கும்— கழகத்தால் வளர்ந்தவர்களுக்கும் இடையே நடைபெறும் தத்துவச் சண்டையாகும்!

"கழக ஆட்சி இன்னும் மூன்று மாதம் நிலைக்குமா — இரண்டு மாதம் நிலைக்குமா —என்றெல்லாம் பேசுகிறார்கள்; நான் உறுதியாகக் கூறுகேன்; உங்கள் ஆதரவுடன் இந்தக் கழக அரசு—ஏழை எளியவர்களுக்காக பாடுபடும் இந்த அரசு—தொடர்ந்து 30 ஆண்டுகள் நிலைத்து நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்ணீரோடு பிறந்தது இந்தக் கழகம்; கண்ணீரோடு செந்நீரையும் செய்து வளர்த்தது இந்தக் கழகம்!

அமைதியாகத்தான் இருப்போம்; ஆர்ப்பாட்டத்திற்கு ஆட்படாது பொறுமையோடு இருப்போம்; ஆனால் பொறுமைக்கும் எல்லை உண்டு; மேலும் மேலும் இடறினால் கழகம் தாங்காது— தூங்கும் புலியை இடறியதுபோல் ஆகிவிடும்!

வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுமானால், அதனைத் தூண்டிவிடுபவர்கள் மக்கள்முன் நிறுத்தப்படுவார்கள்! மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய கட்டத்திற்கு ஆளாக நேரிடும்!

தி. மு. கழகம் தகத்தகாயமாக ஒளிவிடும் சூரியனாக இருக்கிறது; அதை கறைச் சேறால் மறைத்துவிடலாம் என்று எண்ணுவோர், இறுதியில் ஏமாற்றம் அடைவது திண்ணம்!

எத்தகைய நிலைமைகள் நேர்ந்தபோதிலும், கழகத் தோழர்கள் கட்டுப்பாடு குலையாமல் ஒன்றுபட்டு கழகத்தைக் காத்திட எந்த விதத் தியாகத்தை ஏற்கவும் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

— மதுராந்தகம் கூட்டத்தில்

## அறிஞர் அண்ணா கொள்கையை அழிக்கவே அது!

### அமைச்சர் ப. நாராயணசாமி கடுந்தாக்கு

புதுக்கோட்டை, அக். 22—

"அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணாவின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது அல்ல; அண்ணாவின் கொள்கைகளைப் புதைப்பதற்காக அமைக்கப்பட்டதாகும்"

என்று, உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மதுரை மாநாட்டில் மாநில சுயாட்சிக் கோரிக்கையை எம் ஜி ஆர். கடுமையாகத் தாக்கிப் பேசினார்; அதுவே பிளவுக்குத் தொடக்கமாகும்."

## கட்டுப்பாடு கட்சிக்குமுக்கியம்

### அமைச்சர் சாதிக் பாட்சா தெளிவுரை

உதகை, அக். 23—

'ஒழுங்கு— கட்டுப்பாடோன் கட்சிக்கு முக்கியமாகும்; அது குலைக்கப்பட்டால் கட்சி முன்னேற முடியாது.

"திராவிட முன்னேற்றக் கழகத்தை யாரும் அழிக்க முடியாது"

என்று, அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

மக்களவை தி. மு. கழக உறுப்பினர்

## இராசாங்கம் மறைவு

### கழகக் கூட்டத்திற்குச் செல்லுகையில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சி

மதுரை, அக். 22–

தி. மு. கழக முன்னணி வீரர்களில் ஒருவரும் — நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. இராசாங்கம் அவர்கள் இன்றிரவு மாரடைப்பால் இயற்கையெய்தினார் என்பதை ஆருத்துயருடன் அறிவிக்கிறோம்.

மதுரையில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழு விளக்கக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிவிட்டுத் திண்டுக்கல் கூட்டத்தில் கலந்துகொள்வதற்குச் செல்லும் வழியில் இந்தச் சோக நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டுக்கல் கூட்டத்திற்குக் காரில் புறப்பட்டுச் செல்லும் வழியில் திடீரென அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது; உடனே அவரை மதுரை எர்ஸ்கின் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சை நடைபெற்றது; இரவு 10 40 மணியளவில் கடமை வீரர் இராசாங்கம் இயற்கையெய்தினார்.

தகவல் கிடைத்ததும், மதுரை மேயர் எஸ். முத்து மற்றும் சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், தி. மு. கழகப் பிரமுகர்கள் அனைவரும் மருத்துவமனைக்கு விரைந்து சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

உடனடியாக இராஜாங்கத்தின் உடல் அவருடைய சொந்த ஊரான கூடலூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது; அங்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும்.

தோழர் எம். இராசாங்கம் மதுரை மாவட்டச் செயல் வீரர்களில் ஒருவர்; இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.

1965-ம் ஆண்டு இந்திஎதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுக் கைதானார்.

1971-ம் ஆண்டுத் தேர்தலில் அவர் நாடாளுமன்ற உறுப்பினரானார்; நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைகளும்— பணிகளும் இந்தியத் துணைக்கண்டத்தின் கவனத்தை ஈர்த்தன.

கழகத்தின் சோதனைக் கட்டமான இந்த நேரத்தில் கழகக் கட்டுப்பாட்டிற்கு உடன்பட்டுத் துரோகிகளுக்கு எதிராகத் தோள் உயர்த்திப் பாடுபட்டார்; அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும்போதுதான் அவர் நம்மைவிட்டுப் பிரிந்தார்.



அவரது பிரிவால் வாடும் அவரது துணைவியாருக்கும் அவரது சுற்றார் உறவினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மக்கள் மன்றம் தீர்ப்பு அளிக்கும்

## கொள்கை அடிப்படையில் வளர்ந்தது தி. மு. கழகம்

### பொதுச்செயலாளர் நாவலர் தெளிவுரை

கோவை, அக். 23—

"திராவிட முன்னேற்றக் கழகம் சில தனிப்பட்ட நபர்களை வைத்து வளரவில்லை; கொள்கையின் அடிப்படையிலேயே வளர்ச்சியடைந்திருக்கிறது, எனவே, கழகத்தை விட்டு எம்.ஜி.ஆர். விலகியது அதன் பலத்தை எந்த விதத்திலும் பாதிக்காது!

"கழகத்தை வீழ்த்த மாற்றார் பலர் சூழ்ந்திருப்பினும், நாம் கவலைப்படத் தேவையில்லை; அவர்களது முயற்சியில் அவர்கள் தோல்வியே காண்பர்; யாருடைய நிலை என்பது பற்றி மக்கள் மன்றம் தீர்ப்பு அளிக்கும்"

என்று, பொதுச்செயலாளர் நாவ[illegible] இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கோவை — வெற்றிலைக்கார[illegible] நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் சு[illegible] குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"1953-ம் ஆண்டில் எம். ஜி. ஆர். சேருவதற்கு முன்பே கட்சி தோன்றியதாகும்; எனவே கழகத்திலிருந்து அவர் விலகினார் என்றாலும் கட்சி நிலைக்கும்.

1961-ல் ஈ. வெ. கி. சம்பத் கட்சியிலிருந்து வெளியேறினார்.

1953-ம் ஆண்டில் பிரபல நடிகர் சிவா[illegible]கணேசன் கழகத்திலிருந்து [illegible]னார்.

இதுபோன்ற பல சவால்களைக் கட்சி சமாளித்திருக்கிறது.

1949 ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரையில் பெரியார் அவர்களைப்போல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வேறு யாரும் எதிர்ப்பு காட்டியிருக்க முடியாது!

காமராசர் — இராஜாஜியினால்கூட கழகத்தை அசைக்க முடியவில்லை!

சில தனிப்பட்ட நபர்களின் — ரசிகர்களினால் கட்சி வளரவில்லை என்பதும், கட்சியின் கொள்கைகளில் நம்பிக்கைகொண்டு தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தொண்டர்களினால் கழகம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதும் அதற்குக் காரணங்களாகும்.

எம். ஜி. ஆரின் இலஞ்ச ஊழல் புகார்கள் குறித்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை; ஏற்கனவே இதேபோன்ற புகார்களை எதிர்க் கட்சிகள் தெரிவித்திருக்கின்றன; 1971 இடைத் தேர்தலின்போது இப்புகார்களை, வாக்காளர்கள் நிராகரித்து விட்டனர்."

'துரோக'த்திற்குத் துணை போனவரை வருங்காலத் தலைமுறை வாழ்த்தாது…

சிலம்புச் செல்வர் கருத்துரை

# 'மேல்மட்ட தலைவரே கட்டுப்பாட்டை மீறுவதா?'

## 'ஒழுங்கை விரும்புவோர் எவரும் இதனை ஏற்கார்'

### 'கட்சி முழுவதற்கு[illegible]களங்கம் கற்பித்துப் பேசியது தமிழ்நாட்டு அரசியலில் [illegible]விட்ட தவறானதோர் முன்மாதிரியாகும்'

சென்னை, அக் 22—

"கொள்கைத் தொடா[illegible] ஒரு பிரச்சினையில், தி. மு. கழகத்துடன் பூசல் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் எம்.ஜி. ஆர்.; இதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்கிறது.

"தி. மு. கழகம் மிகுந்த துணிவோடு -- தனிப்பட்ட விருப்பு வெறுப்பை மறந்து, கட்சியின் -- நாட்டின் நலன் கருதி அன்பர் எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது; இதனை, 'தனி நபர்களை விடவும் கட்சிதான் பெரிது' என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கை உடைய கட்சிகள் அனைத்துமே ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன.

"கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக வருத்தந் தெரிவித்து தம்முடைய கழகத்தினுடைய பெருமையை எம்.ஜி.ஆர். காத்திருக்கலாம்; வருத்தம் தெரிவித்திருந்தால் அவர் பெருமை அதிகரித்திருக்குமே தவிர குறைந்திருக்காது; சூழ்நிலை அந்த நல்ல காரியத்தைச் செய்ய அவரை அனுமதிக்கவில்லைபோலும்!

"தமக்கு எதிராகப் பொதுச்செயலாளர் எடுத்த நடவடிக்கை தி.மு.க. செயற்குழுவிலும் -- பொதுக்குழுவிலும் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதனை அன்பர் எம்.ஜி.ஆர். அலட்சியப்படுத்திவிட முடியாது; அவரைவிட்டுப் பிரிய மனமற்றவர்களாகக் காணப்படும் திரு. கி. மனோகரன், திரு. கோவை செழியன் ஆகியோர்கூட, 'கட்டுப்பாட்டை அவர் மீறியிருக்கிறார்' என்பதனை ஒப்புக்கொண்டுள்ளனர்!

"எதிர்காலத்தில் எம்.ஜி.ஆர். எப்படி நடந்துகொண்டாலும்சரி -- தமிழ்நாட்டு மக்கள், தி. மு. கழக அரசுக்குத் தொடர்ந்து தங்கள் ஆதரவை அளித்துவர வேண்டும்; வேறுவிதமாக நடப்பவர்களை வருங்காலத் தலைமுறை வாழ்த்தாது -- இது சத்தியம்"

என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், 'செங்கோல்' இதழில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்; அவர் மேலும் கூறியிருப்பதன் சில பகுதிகள் வருமாறு:—

"'வட்டச் செயலாளரிலிருந்து மாவட்டச் செயலாளர் -- வரையில் கழக நிர்வாகிகள் அனைவரும் தங்கள் சொத்துக்களுக்குக் கணக்குக் காட்டவேண்டும்' என்று எம். ஜி. ஆர். கோரினார்; கழக நிர்வாகிகளோடு அவர் விட்டுவிடவுமில்லை -- 'அவர்களுடைய குடும்பத்திலுள்ளவர்களும் தங்களுடைய சொத்துக்களுக்குக் கணக்குக் காட்ட வேண்டும்' என்றார்.

உண்மையில் -- முதல்வர் கூறியது போன்று -- எம். ஜி. ஆர். கோருவது, இதுவரை உலகில் எந்தக் கட்சியும் கடைப்பிடிக்காததாகும்; 'தி. மு. க. கிளைகளின் எண்ணிக்கை 18 000 என்கிறார் முதல்வர்; அந்தப் பதினெட்டாயிரம் கிளைகளின் செயலாளர்களும் -- அவர்கள்குடும்பத்தினரும் தங்கள் சொத்துக்களுக்குக் கணக்குக் காட்டுவதோ அதைப் பரிசீலனை செய்து எம். ஜி. ஆருக்கு மனநிறைவை ஏற்படுத்துவதோ சாதாரணமாக நடக்கக்கூடிய காரியமல்ல!

ஏற்கனவே எம்.எல்.ஏ.-க்களும், எம்.எல்.சி.-க்களும் (அமைச்சர்கள் உட்பட) தங்கள் சொத்துக்களுக்கு ஆண்டுதோறும் கணக்குக் காட்டி வருகிறார்கள்; இதுகூட இந்த மாநிலத்தில் தான் -- தி. மு. கழக ஆட்சியில்தான் -- நடைமுறைக்கு வந்தது என்பதனை மறந்துவிடக் கூடாது. அரசுக்கு அனுப்பப்படும் இந்தக் கணக்குகளின் நகல்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றன.

அமைச்சர்களோ, சட்டமன்ற தி. மு. க. உறுப்பினர்களோ தவறாகச் சொத்து சேர்த்துவிட்டார்கள் என்று எம். ஜி. ஆர். கருதுவாரானால், அவர்கள் ஆண்டுதோறும் தரும் கணக்குகளை அவரே பரிசீலனை செய்து--குற்றங்குறைகளைக் கண்டுபிடித்து வெளியிட அவருக்கு வாய்ப்பு இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் (அமைச்சர் உட்பட) தங்கள் சொத்துக்களுக்கு ஆண்டுதோறும் கணக்குக் காட்டும் வழக்கம் நான்கு ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வந்திருந்தும், இதுவரை தவறான கணக்குக் கொடுத்ததாக எவர் மீதும் யாரும் குற்றஞ்சாட்ட முன்வரவில்லை; ஆண்டுதோறும் கணக்குக் கொடுக்கும் கடமையை எம். ஜி. ஆர். நிறைவேற்றவில்லை என்றும் 13 முறை நினைவூட்டிக் கடிதம் அனுப்பியும் பயனில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

நிலைமை இதுவாக, திடீரென்று வட்டச் செயலாளர்களிடமும் -- அவர்கள் உறவினர்களிடமும் சொத்துக் கணக்குக் கேட்கவேண்டுமென்று எம். ஜி. ஆர். கோரியதில் நியாயமிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை; எம். ஜி. ஆரின் இந்தக் கோரிக்கை, கட்சி முழுவதையுமே புண்படுத்தியதாகுமென்று முதல்வர் கூறியதில் நியாயம் இருக்கிறது!

மதுவிலக்கை தி. மு. கழக அரசு கைவிட்டது பற்றியும் இப்போது எம். ஜி. ஆர். குற்றம் சொல்லுகிறார்; இதிலும், அவரது வாதத்தில் வலிமை இல்லை; தஞ்சையில் கூடிய பொதுக்குழுவில் மதுவிலக்கைக் கைவிடவேண்டுமென்று வந்த தீர்மானத்தை எம். ஜி. ஆர் அவர்களும் ஆதரித்தார் என்று சொல்லப்படுகிறது; அதனை, இதுவரை அவர் மறுக்கவில்லை.

கொள்கையிலே ஊசலாட்டம் இல்லாதவர்கள் தான் அதற்காகப் போராட வலிமை பெற முடியும்; மதுவிலக்கு எடுபடுவதை முதலில் ஆதரித்துவிட்டு -- இப்போது எதிர்ப்பது என்பது, பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடிப்பதாகாது!

எம். ஜி. ஆர். சொத்துக் கணக்குக் கேட்டிருப்பது, தன் கழகத்திற்கு எதிர்க்கட்சியாகவுள்ள இந்திரா காங்கிரசிடமிருந்து அல்ல; தாம் எந்தக் கழகத்தின் பொருளாளராக இருந்தாரோ-- அந்தக் கழகத்தாரிடம்தான் கேட்டிருக்கிறார்; ஆகவே, கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு கட்சியின் பொதுக்குழுவிலே அதைக் கேட்க வேண்டும்; மேல்மட்டத் தலைவர்களில் ஒருவரான அவரே இந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தவறியது சாதாரண விஷயமல்ல!

பொதுக்குழு கூடும் தேதி அறிவிக்கப்பட்டு விட்ட நிலையிலே அன்பர் எம்.ஜி.ஆர்., தெருவில் (பொதுக்கூட்டத்தில்) நின்று கணக்குக் கேட்பது? பொதுக்குழுவில் கணக்குக் கேட்டுத் தீர்மானம் கொடுக்கப்போகும் விஷயத்தை முன்கூட்டியே பொதுமேடையில் சொல்லியாக வேண்டிய அவசியமில்லை; சொன்னதோடு நிற்காமல், 'எனது தீர்மானம் ஏற்கப்படவில்லையானால், நான் மக்களை அணுகுவேன்' என்று எம். ஜி. ஆர். பேசியது, மட்டுமல்லாமல், கட்சிக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் விரும்பும் எந்தக் கட்சியும் பாராட்ட முடியாததாகும்!

பொதுக்குழு கூடவிருந்த நேரத்தில் எம். ஜி. ஆர்., நாள்தோறும் பொதுக்கூட்டம் போட்டு-- அந்தக் கூட்டங்களிலே கட்சி முழுவதற்குமே களங்கம் கற்பித்துப் பேசியது; தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்டுவிட்ட ஒரு தவறான முன்மாதிரியாகும்!

தி. மு. கழக அரசு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் -- தமிழ் இனத்தின் தனி நலன்களுக்கும் பாடுபட்டு வருகிறது; தமிழின் -- தமிழ் இனத்தின் பகைவர்கள் இந்த அரசை ஒழித்துக்கட்ட முயன்று வருகின்றனர்; அவர்கள் முயற்சிக்குத் தெரிந்தோ தெரியாமலோ உதவுவோர், தமிழின் -- தமிழ் இனத்தின் வருங்காலத்திற்குக் கேடு செய்வோராவர்; இந்தக் கோணத்தில் நின்று பார்த்து, நாம், தி. மு. க. பொதுக்குழுவின் முடிவு தவிர்க்க முடியாததென்று கருதுகிறோம்."

---

## கட்டுப்பாட்டு விலையோ ரூ. 10

### கள்ள மார்க்கெட்[illegible] விற்கப்படுவதோ[illegible]

புதுடில்லி, அக். 21[illegible]

தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மதுவைத் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்களில் கரும்புச் சாறு கழிவுப்பாகு ஒன்று ஆகும்.

கரும்புச்சாறு கழிவுப் பாகு சம்பந்தமான மத்திய அரசு கட்டுப்பாட்டு உத்தரவின்படி, இதன் விலை ஒரு டன்னுக்கு ரூ. 10 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; ஆனால், கள்ளமார்க்கெட்டில் இது ஒரு டன்னுக்கு ரூ 100 முதல் ரூ. 400 வரையில் விற்கப்படுகிறது.

இங்ஙனம், இந்திய அரசுக்குக் கவலை அளிப்பதாக புதுடில்லியில் அதிகார வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

## மூடப்பட்டுள்ள ஆலை தொழிலாளருக்கு மீண்டும் நிதியுதவி

### [illegible]தலமைச்சர் நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் வழங்கப்படுகிறது

கோவை வட்டாரத்தில் இன்னமும் திறக்கப்படாமலிருக்கின்ற காளீசுவரா -- பங்கஜா -- சாரதா ஆகிய மூன்று ஆலைகளை மீண்டும் திறப்பதற்காக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

"மூடப்பட்டுள்ள ஆலைகளினால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்கனவே முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ 5 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது; இப்போது மீண்டும் முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ 1 இலட்சம் தரப்படுகிறது; இதனால் மூன்று ஆலைகளையும் சேர்ந்த 3,000 தொழிலாளர் குடும்பங்கள் பயனடையும்"

என்று செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

## ரூ.2,15 கோடி மதிப்புள்ள கடத்தல் பொருள் பறிமுதல்

புதுடில்லி, அக். 23—

இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மட்டும் இந்தியா முழுவதிலும் சுரங்கத் துறை அதிகாரிகள் ரூ 2.15 கோடி மதிப்புள்ள பொருட்களைப் பறிமுதல் செய்தனர். இதில் வெளிநாட்டுத் தங்கத்தின் மதிப்பு மட்டும் ரூ. 1 இலட்சம் ஆகும்.

பறிமுதலான இதர பொருட்களின் மதிப்பு வருமாறு:—

வெளிநாட்டு கைக்கடிகாரங்கள் ரூ. 7 இலட்சம்.

செயற்கைப் பட்டு, துணிமணிகள் ரூ. 92 இலட்சம்.

வெளிநாட்டுக்குக் கடத்த முயன்ற போதை மருந்துகள்-- வெள்ளி ரூ. 9 இலட்சம்.

லாரிகள்--பெரிய நீராவிப் படகுகள்--சிறு படகுகள் ரூ 7 இலட்சம்.

இதர பொருள்கள் ரூ. 94 இலட்சம்.

ரொக்கம் ரூ. 5 இலட்சம்.

---



கண்ணீர்க் கடிதங்கள் குவிகின்றன…

தோழர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பு

# 'கழகத்தின் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்போம்'

## 'கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு காப்போம்'

### கழகக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டவரின் பெயரில் இயங்கிய மன்றங்கள் நாடு முழுவதிலும் கலைப்பு

சென்னை, அக். 23

"கழகத்தை மாற்றாருக்குக் காட்டிக் கொடுக்கும் இழிசெயலில் ஈடுபட்டதற்காகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஒருவரது பெயரால் இனியும் மன்றங்கள் அமைத்துக் கொண்டு-- அவற்றில் அங்கம் வகிப்பது வெட்கத்திற்கும் வேதனைக்கும் உரியதாகும்; எங்களால் உருவாக்கப்பட்ட இந்த மன்றங்களைக் கலைத்துவிட்டு வேறு பெயரில் இம்மன்றங்களை அமைத்து -- கழகத்தின் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடந்து, கழகக் கொள்கையான கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாட்டினைப் பாதுகாத்து நடப்போம் என உறுதி கூறுகிறோம்"

இவ்வாறு கழகக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்ட எம். ஜி. ஆர் பெயரில் இயங்கிவந்த மன்றங்களின் நிர்வாகிகள் -- தோழர்கள், உணர்ச்சிக் கொந்தளிப்புடன் தி. மு. க. தலைமை நிலையத்திற்கு எழுதியுள்ள கடிதங்களில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டுள்ளனர்; நாடு முழுவதிலுமிருந்தும் இதுபோன்ற கடிதங்கள் குவிந்தவண்ணமிருக்கின்றன.

பொதுக்குழுக் கூட்ட முடிவுக்குப் பின் தமிழ்நாடு முழுவதிலும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட எம். ஜி. ஆ. மன்றங்களும் -- ரசிகர் மன்றங்களும் கலைக்கப்பட்டு வருகின்றன.

எம். ஜி. ஆர். மன்றங்கள் கலைப்புப் பற்றியும், அம் மன்றங்கள் வேறு பெயரில் இயங்கி வருவது பற்றியும் தி. மு. க. தலைமைக் கழகத்துக்கும்--பத்திரிகை அலுவலகங்களுக்கும் -- கழகத் தலைவர்களின் இல்லங்களுக்கும் கடிதங்கள் குவிந்தவண்ணம் இருக்கின்றன.

எம். ஜி ஆர். மன்றங்களைக் கலைத்து, 'அண்ணா மன்றம் -- கலைஞர் மன்றம் -- நாவலர் மன்றம் -- பேராசிரியர் மன்றம் -- நடிப்பிசைப் புலவர் மன்றம் -- கலைவாணர் மன்றம் என்றும், மற்றும் கழக முன்னணித் தலைவர்கள் பெயரிலும் மன்றங்களை அமைத்து வருவதாக நாள்தோறும் கடிதங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதிலும் இதுவரை மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டுவிட்டன.

கழகத்திடம் தாங்கள் கொண்டுள்ள உண்மையான பற்றை -- அன்பைத் தெரிவித்துத் தோழர்கள் எழுதிவரும் கடிதங்கள், உணர்ச்சி கொந்தளிப்பைப் பிரதிபலிப்பதாக உள்ளன.

எம். ஜி ஆர். மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து இரத்தத்தில் கையெழுத்திட்ட கடிதங்கள்கூட பல வந்துள்ளன.

எல்லாக் கடிதங்களிலும், கட்டுப்பாட்டை மீறிய எம். ஜி. ஆர். மீது தலைமைக் கழகம் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டியும் -- வரவேற்றும் எழுதியுள்ளனர்.

மன்றங்களைக் கலைப்பதுடன் பல தோழர்கள் எம். ஜி ஆர். மன்றப் பொறுப்புக்களிலிருந்தும் விலகியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

## அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

### சென்னை 103 வது வட்டம்

தி. மு. க. சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும் -- கிளைக் கழகப் பணிமனைத் திறப்பு விழாவும் 8—10—72 ல் கோமதி நாராயணசாமி செட்டி ரோடு (சன் தியேட்டர் அருகில்) நடைபெற்றது.

திரு. ச. அப்பனசாமி தலைமையில், வை. பாலசுந்தரம் எம்.சி எம்.எல்.ஏ. கொடியேற்றி வைத்தார்.

அமைச்சர் என். வி. நடராசன் பணிமனையைத் திறந்து வைத்தார்.

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி.) பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

பேராசிரியர் மா. கி. தசரதன் கலைஞர் படத்தைத் திறந்து வைத்தார்.

முரசொலி மாறன் எம்.பி. மூவாயிரம் பேருக்கு உணவு வழங்கினர்.

நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி. அண்ணா படத்தைத் திறந்து வைத்தா.

தோழர்கள் மு. நடராசன் (வட்டச் செயலாளர்), எஸ். ஏழுமலை ச. கோவிந்தசாமி, பி. மாரியப்பன், மா. தேசமுத்து, கே. முருகேசன், மு. மன்னன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### பழவேற்காடு

தி. மு. க. கிளை சார்பில் 17—9—72 அண்ணாவின் திருவுருவப் படம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, சிறப்பாகக் கொண்டாடப்பட்டது; 1000 பேர்களுக்கு வெண்பொங்கல் வழங்கப்பட்டது.

### பெங்களூர்

பெங்களூர் சுதந்தர நகர் தி. மு. க. சார்பில் 1—10—72 அன்று அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் சேவாசிரமம் திடலில் நடைபெற்றது.

திரு. வி. கே. நாகலிங்கம் அனைவரையும் வரவேற்றார்.

டாக்டர் சி. பாலசுந்தரம் எம்.சி. தலைமை தாங்கினர்.

திரு துரைமுருகன் எம்.எல்.ஏ., திராவிடமணி எம்.எல்.ஏ., எஸ். என. நாராயணன், கே. எம். சம்பங்கி ராமையா, எம் குமார் ஆர். டி. கங்காதரன், வி, எஸ். கண்ணன், ஜி கரிகாலன், எஸ். ஈ. வேணுகோபால் ஆகியோர் பேசினர்.

திரு. மு. இராமன் நன்றி நவின்றார்.

---

# நாகரிக அரசியலுக்கு ஏற்றதுதானா?

## 'பிரச்சினை முடிந்துவிட்ட பின்னரும் வன்முறைகளுக்கு வித்திடுவதா?'

### அமைதியை நிலைநாட்ட தீவிர நடவடிக்கை

சென்னை, அக். 23—

சென்னை நகரிலும் -- வேறு சில இடங்களிலும் வன்முறைச் செயல்கள் நடைபெற்று வருவதை முதலமைச்சரின் கவனத்திற்குச் செய்தியாளர்கள் கொண்டுவந்து, அதுபற்றி வினவியபோது கலைஞர் அவர்கள், 'இப்படிப்பட்ட நாகரிக அரசியல்தான் நாட்டில் நடைபெறுகிறது; இதுபோன்ற வன்முறைச் செயல்கள் நடைபெறாமல் தடுக்கக் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்' என்று தெரிவித்தார்.

கேள்வி:—"போலிசார் நடவடிக்கை எடுத்தும்கூட, அமளியும் -- வன்செயல்களும் நின்றுவிட்டதாகத் தெரியவில்லை; 'இன்னும் சற்றுத் தீவிரமான நடவடிக்கை எடுத்து வன்செயல்கள் அறவே நடைபெறாமல் தடுக்க வேண்டும்' என்று மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுவது தெரியுமா?"

முதல்வர்:—"அதுவும் கவனிக்கப்படும்; இது ஒரு கட்சிப் பிரச்சினை; அந்தப் பிரச்சினைக்குரியவர்களும் வேறு ஒரு கட்சியைத் தொடங்கிவிட்டதால் அதுவும் முடிவடைந்துவிட்டது; இதற்குப் பிறகும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுமேயானால், மக்கள் விரும்புகின்றவாறு சட்டம் -- ஒழுங்கு -- அமைதியை நிலைநாட்டத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்; இதற்குப் பத்திரிகைகளும் -- பொதுமக்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும்."

## நன்றி உணர்வு வற்றிவிடவில்லை

கேள்வி:—"கருத்து வேறுபாடு காரணமாகக் கட்சி பிளவுபடுவது என்பது தமிழ்நாட்டில் புதிதல்ல; இதற்கு முன்பும் இங்கு பல கட்சிகள் பிளவுபட்டிருக்கின்றன; அப்போதெல்லாம் நடைபெறாத வன்செயல்களும் -- அமளியும் இப்போது மட்டும் நடைபெறுவது ஏன்? பின்னணியில் யாரேனும் இருந்து 'தூண்டிவிட்டு நடத்துவதாக நினைக்கிறீர்களா?"

முதல்வர்:—"நான் இந்திரா காந்தியின் பெயரைச் சொல்வேன் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்; அந்தப் பெண்மை உள்ளத்தில் நன்றி உணர்வு வற்றிப் போய்விடவில்லை என்பதை நான் நன்றாக உணர்வேன்; நடைபெற்றுவருபவை, 'மூலஸ்தான'த்தின் வேலையன்று; சில 'உற்சவ விக்கிரக'ங்களின் வேலைதான்!

"இப்போது கட்சியில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை குறித்துப் பதிலுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை; கழகத் தோழர்களுக்கும் -- பொதுமக்களுக்கும் நான் சொல்ல விரும்புவதைப் பத்திரிகையில் எழுதி வருகிறேன்; பொதுக்கூட்டங்களில் பேசியும் வருகிறேன்; மக்களுக்காக ஏற்றுக் கொண்டிருக்கின்ற அரசாங்கப் பணிகளைச் செய்வதில் நிருபர்களின் கேள்விகள் எனக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இருக்கவேண்டும்."

## தமிழகத்திற்கு ஒதுக்கும் சர்க்கரை அளவில் 10 சதவிகிதம் வெட்டு

### மத்திய அரசு அறிவிப்பு

சென்னை, அக். 21—

"மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கும் சர்க்கரையின் அளவில் டிசம்பர் மாதத்திலிருந்து 10 சதவிகிதம் வெட்டு செய்யப்படலாம்; இதன் விளைவாகத் தமிழ்நாட்டில் சர்க்கரைக் கார்டு உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் அளவைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்"

என்று, தமிழக அரசின் உணவுத் துறைச் செயலாளர் இராமசந்தர் நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழ்நாட்டுக்கு வழக்கமாக ஒதுக்கீடு செய்யப்படும் மாதாந்தரக் கோட்டா 10,800 டன்கள் ஆகும்; ஆனால் நவம்பர் மாதத்திற்கான இந்த ஒதுக்கீட்டின் அளவு குறைந்து 9,100 டன்கள் ஒதுக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

"ஒவ்வொரு மாத சர்க்கரை ஒதுக்கீட்டை அதற்கு முந்தைய மாத மத்தியில் ஒதுக்கீடு செய்யவேண்டும்" என்று நாம் வற்புறுத்தி வருகிறோம்; ஆனால் மத்திய அரசினர், முந்தைய மாத கடைசி வாரத்தில் ஒதுக்கீடு செய்ய ஒப்புக்கொண்டு அவ்வாறே செய்துவருகின்றனர்."

## தலைமைக் கழக முடிவு

### மதுரை மாநகராட்சி தி. மு. க. உறுப்பினர்கள் ஒருமனதாக ஏற்பு

18—10—72-ல் நடைபெற்ற மதுரை மாநகராட்சி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தி. மு. கழகத்தின் முன்னாள் பொருளாளர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், தி. மு. கழக விதிகளுக்குப் புறம்பாகக் கழகக் கட்டுப்பாட்டை மீறியதாகத் தலைமைக் கழகம் எடுத்த முடிவை மதுரை மாநகராட்சி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

கூட்டத்திற்கு மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் திரு. சே. எஸ். சந்தானம் தலைமைதாங்கினார்.

## ஊராட்சி ஒன்றியங்களின் சமூகக் கல்வித் திட்டம்

### தமிழக அரசின் நிதி உதவி

திருச்சி, அக். 23—

தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் சமூகக் கல்வித் திட்டங்களுக்காக இவ்வாண்டில் மாநில அரசு ரூ. 15.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு விவசாயிகளை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளுக்காக இந்தத் தொகையில் ரூ. 3.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள்--உயர் விளைச்சல் ரகங்கள் பயிராகும் பகுதிகள் ஆகியவற்றுக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்படுவர்;

ஒவ்வொரு கிராமத்திற்கும் நூலகத்திற்காக ரூ. 200 தரப்படும்.

ஒவ்வொரு ஊராட்சிமன்றத்திற்கும் விளையாட்டு நடவடிக்கைக்காக ரூ. 200 கொடுக்கப்படும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தகவல் நிலையத்திற்காக ரூ. 100 தரப்படும்.

கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கு வானொலிப் பெட்டி வழங்கும் வகையில் ஒவ்வொரு வானொலிப் பெட்டிகளுக்காகவும் ரூ 100 உதவித் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் இப்போது 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

## காட்டுமன்னார்கோவில் நில வள வங்கித் தேர்தல்

காட்டுமன்னார்கோவில் பிரதம நில வள வங்கிக்கு நடைபெற்ற தேர்தலில், தலைவராக எம். ஆர். கிருட்டிணமூர்த்தியும், துணைத் தலைவராக பி. ஏ. கண்ணையனும், நிர்வாகிகளாக ஜே. அப்துல் ரகிமான், எம். இரத்தினம, ஆர். கணேசன், எஸ். பெருமாள் எம்.எல்.ஏ., கலியமூர்த்தி, சுந்தரமூர்த்தி, குஞ்சிதபாதம், நாராயணசாமி, திருமதி கோடீஸ்வரி, சிவகுமார் ஆகியோர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---



கைத்தறியாளர் துயர் துடைத்திட....

# தமிழ்நாடு முழுவதும் கழகத் தலைவர்கள்-தோழர்கள் கைத்தறித் துணிகள் விற்பர்

## முதலமைச்சர் --- அமைச்சர் பெருமக்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்

### நாடாளுமன்ற-சட்டமன்ற-மாநகராட்சி-நகராட்சி மன்றங்களின் தி. மு. கழக உறுப்பினர்கள் கலந்துகொள்கின்றனர்

சென்னை, அக். 19—

கைத்தறியாளர் துயர் துடைக்க முன்பொரு முறை தி. மு. கழகத் தலைவர்களும் -- தோழர்களும் எல்லா ஊர்களிலும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ததுபோல், இப்போதும் நெசவாளர்கள் துயர் துடைக்க, இத்திங்கள் 29-ஆம் நாளன்று கைத்தறித் துணிகளை நாடெங்கும் விற்பனை செய்வது என்று தி. மு. கழகப் பொதுக்குழு கடந்த 15-ஆம் நாளன்று சென்னையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கேற்ப, தமிழகமெங்கும் இத்திங்கள் 29-ஆம் நாளன்று தமிழக அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற -- மேலவை -- நாடாளுமன்ற -- மாநகராட்சி -- நகராட்சி தி. மு. கழக உறுப்பினர்களும் கைத்தறி ஆடைகளை விற்பனை செய்வர்; எவரெவர் -- எங்கெங்கு அந்நாளில் கைத்தறி ஆடை விற்பார்கள் என்ற விவரம் பற்றிய தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு:—

**சேலம்**
முதலமைச்சர் கலைஞர்
ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி.,
கே. செயராமன் எம்.எல்.ஏ.

**மதுரை**
அமைச்சர் நாவலர்
மேயர் முத்து எம்.எல்.சி.
காவேரிமணியம் எம்.எல்.ஏ.
இராமகிருட்டினன் எம்.எல்.ஏ.
கு திருப்பதி எம்.எல்.ஏ.

**சென்னை**
அமைச்சர் பேராசிரியர்
க. அன்பழகன்
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
முரசொலி மாறன் எம் பி.
வி. முனுசாமி எம்.சி.
மேயர் காமாட்சி செயராமன்
துணை மேயர் என். வி. என். சோமு
நீலநாரயணன் எம்.எல்.சி.
எம். ஆ. கண்ணன் எம்.எல்.ஏ.

**காஞ்சிபுரம்**
அமைச்சர் என். வி. நடராசன்
சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.
சி. வி. இராசகோபால் எம்.எல்.சி.
கே. டி. எஸ். மணி

**கோவை**
அமைச்சர் சத்தியவாணிமுத்து
எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி.
அரங்கநாதன் எம்.எல்.ஏ.
காட்டூர் கோபால் எம்.எல்.சி.

**வேலூர், ஆரணி**
அமைச்சர் ப. உ. சண்முகம்
மா. பா. சாரதி
ஏ. வி. நரசிம்மன் எம்.எல்.ஏ.
தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ.
தேவராசன் எம்.எல்.சி.

**பரமக்குடி -- அருப்புக்கோட்டை**
அமைச்சர் செ. மாதவன்,
எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
சிறைமீட்டான் எம்.எல்.ஏ.
தங்கபாண்டியன் எம்.எல்.சி.

**பொள்ளாச்சி -- உடுமலை**
அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா
தண்டபாணி எம்.பி.
சண்முகசுந்தரம் எம்.எல்.ஏ.

**திருச்சி, கரூர்**
அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்
பராங்குசம் எம்.எல்.சி.
து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ.
எம். எஸ். வெங்கடாசலம்
வி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ.
நல்லுசாமி

**நெல்லை**
அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
டாக்டர் பத்மனாபன்
சூரியநாராயணன்

**தஞ்சை -- குடந்தை**
அமைச்சர் மன்னை நாராயணசாமி
எஸ் நடராசன் எம்.எல் ஏ.
கோ. சி.[illegible]ணி எம்.எல் சி.
கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.

**தர்மபுரி**
அமைச்சர் க இராசாராம்
ஆர். சின்னசாமி எம்.எல்.ஏ.
காவேங்கடம் எம்.எல்.ஏ.

**நெய்வேலி**
அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்

**திண்டுக்கல்**
அமைச்சர் ஓ பி. இராமன்

**மேலூர்**
பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ.
பி. முத்துசாமி எம்.எல்.ஏ.
மலைச்சாமி

**ஈரோடு -- திருப்பூர்**
அமைச்சர் மு. கண்ணப்பன்
எஸ். கே. சுப்பிரமணியம் எம். எல்.ஏ.
துரைசாமி எம்.எல்.ஏ.
சுவாமிநாதன் எம்.பி.

**கோவில்பட்டி**
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

**தூத்துக்குடி**
எம். எஸ். சிவசாமி எம்.பி.
இராமலிங்கம் எம்.எல்.ஏ.

**செங்கற்பட்டு**
இரா. செழியன் எம்.பி.
பசுபதி
செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ.

**இராசிபுரம்**
ஆறுமுகம் எம்.எல்.ஏ.
நைனாமலை எம்.எல்.ஏ.

**நாமக்கல்**
மா. முத்துசாமி எம்.பி.
மு. பழனிவேலன் எம்.எல்.ஏ.

**மாயவரம்**
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
கிட்டப்பா எம்.எல்.ஏ.
கிருட்டினமூர்த்தி

**புதுக்கோட்டை**
கே. வி சுப்பையா எம்.எல்.ஏ.
வீரையா எம் பி.
காடுவெட்டி தியாகராசன்
இளஞ்செழியன் எம்.எல்.ஏ.

**நாகர்கோயில்**
புதுவை முதல்வர் பாரூக்
எம். சி. பாலன் எம்.பி.
இராஜாபிள்ளை எம்.எல்.ஏ.
எம். இராசகோபால்

**கடலூர்**
எம். செல்வராசு எம்.எல்.ஏ.
கோவிந்தராசன் எம்.எல்.ஏ.

**விழுப்புரம்**
மு. சண்முகம் எம்.எல்.ஏ.

# ‘சிறைக் கொடுமைகளை அறியாத எம்.ஜி. ஆர். தியாகத் திருவுருவுகளை ஏளனம் செய்கிறார்

[✱]

## ‘முதலில் தமது சொத்துக் கணக்குகளை அவர் காட்டட்டும்---பிறகு மற்றவர்களைக் கேட்கட்டும்; அதுவே முறை-நியாயம்’

### பேராசிரியர் க. அன்பழகன் முழக்கம்

திருச்சி, அக். 23—

“தி. மு. கழகத்திலுள்ள ஒவ்வொருவரும் பலவிதத் தியாகங்களைச் செய்தவர்கள்; கழகக் கண்மணிகள் பலர் உயிர்த் தியாகமே செய்தனர்; தீக்குளித்தனர்; சிறைக் கொடுமைகளை ஏற்றனர்; இவ்விதக் காரணங்களாலே தான் தி. மு. கழகம் ஆட்சிபீடம் ஏறியது.

“அப்படிப் பரம்பரை பரம்பரையாகக் கழகத் தியாகிகளாக இருக்கும் நம்மைப் பார்த்துத்தான் எம்.ஜி.ஆர். ஏளனம் செய்கிறார்; கழகத்திற்காக எவ்விதத் தியாகத்தையும் செய்யாத--போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைச்சாலையைப் பார்க்காதவர்தான் நம்மைப் பார்த்துக் கணக்குக் கேட்கிறார்!

“திரைப் படங்களில் நடிப்பதற்கு அவர் பெறுகின்ற வருமானம் அனைவருக்கும் தெரிந்தாலும், வருமான வரி எவ்வளவு கட்டுகிறார் என்பது உண்மை அறிந்தவர்களுக்குத் தான் தெரியும்; ஆகவே, முதலில் எம்.ஜி.ஆர். தன்னுடைய சொத்துக் கணக்கைக் காட்டட்டும்; பிறகு, மற்றவர்களைக் கேட்கட்டும்; அதுதான் முறை -- நியாயமும்கூட!”

என்று, பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சீரங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

“புதிய கட்சி ஒன்றைத் தொடங்கி மக்களை ஏமாற்ற முடியும் என்று எம். ஜி. ஆர். நினைத்தால் அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார் என்பதுதான் அர்த்தம்!

“பலர் தியாகம் செய்து கட்டிய அமைப்பு அது! ஒரு தனிப்பட்ட மனிதரால் அதை அழித்துவிட முடியாது!

தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து சென்ற எம். ஜி. ஆர். அவர்களால கழகத்திற்கு எவ்வித நட்டமும் இல்லை; அதனால் அவருக்குத்தான் நட்டம்!

எம். ஜி. ஆர். பிரிந்து போனதால் கழகத்திற்கு எந்தவிதமான பலவீனமும் ஏற்பட்டு விடாது!

கலைஞர் -- நாவலர் -- அன்பில் -- நான் எல்லாம் தொடக்கம் தொட்டு தி. மு. கழகத்தில் இருந்து வருபவர்கள்; ஆனால் அவரோ 1953-ல்தான் தி. மு. கழக உறுப்பினரானார்.

திரைப்பட உலகில் தனக்கொரு நல்ல நிலை ஏற்பட வேண்டுமானால் கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும் -- என்ற நிலைமையில் தி. மு. கழகத்தில் சேர்ந்தார் எம். ஜி. ஆர்.

1971-ம் ஆண்டு இடைத் தேர்தல் நடந்து முடிந்த நேரம்; தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தன; அப்போது நேபாளத்தில் இருந்த எம். ஜி ஆர்., கலைஞர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ‘அமைச்சரவை அமைப்பதில் நான் வந்த பிறகு முடிவு செய்துகொள்ளலாம்; எனக்கொரு அமைச்சர் பதவி வைத்துக் கொள்ளுங்கள்’ என்று கூறினார்.

‘நடிகராக இருப்பவர்களானாலும் -- வேறு எந்தத் தொழிலில் இருப்பவர்களானாலும் -- அதை விட்டுவிட்டுத்தான் அமைச்சராக வேண்டுமென்று சட்டம் இருக்கிறது’ என்று கலைஞர் கூற ‘சட்டத் திட்டத்தை மாற்றிக்கொள்ள முடியாதா’ என்று கேட்டார் எம.ஜி.ஆர்.; ‘பொதுச்செயலாளரைக் கலந்து கொண்டு சொல்கிறேன்’ என்று கலைஞர் கூறினார்.

அமைச்சர் பதவி தராததால் எம். ஜி. ஆருக்குக் கோபம்---

அப்போதிருந்தே அவர் கழகத்தைத் தாக்கிப் பேசத் தொடங்கினார்!

கழகத்தை மிகச் சாதாரணமாக நினைத்துக் கொண்டிருக்கிறார் அவர்; பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட தி. மு. கழகத்தை யாராலும் அசைத்து விடவோ--அழித்து விடவோ முடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும்.”

## சேலம் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு:

“சேலம் மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 24-10-72 மாலை 3 மணியளவில் ‘அறிஞரகத்தில்’ நடைபெறும்; அதுபோது ‘கழகப் பணி’கள் குறித்து ஆலோசிக்கப்படும்; அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்”

—என்று, மாவட்டச்செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

## பவானி வட்ட கழகக்காவலர் கூட்டம்

“24—10—72 மாலை 4-மணியளவில், பவானி வட்ட தி. மு. கழகக் காவலர் கூட்டம் அவைத்தலைவர் கே. சௌந்தவேலப்பன் தலைமையில் டி. கே. ஆர். ஆலையில் நடைபெறும்; பொருள்: கழக வளர்ச்சி-எதிர்கால நடவடிக்கைகள்” என்று வட்ட தி மு க. செயலாளர் இரா. துரை அறிவிக்கிறார்.

## உடுமலை வட்ட -- நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்

“24—10—72 மாலை 2 மணியளவில உடுமலை ப்ரேவோ திரை அரங்கில், உடுமலை வட்ட--நகர தி. மு. கழகச் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறும்; கூட்டத்தில் அமைச்சர் எஸ் ஜே சாதிக் பாட்சா, கோவை மு. இராமநாதன் எம்.எல்.சி. ஆகியோர் கலந்துகொள்வர்; அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்”

என்று வட்டச் செயலாளர் க. பருவதக்கண்ணன் [illegible]விக்கிறார்.

தாழ்த்தப்பட்டோர் ந[illegible]மச்சர்

## சத்தியவா[illegible]து

### நிகழ்ச்சிகள்

அக். 24 மாலை 4 மணி: பாப்பாகுடி -- மின் விளக்கு ஏற்றி வைத்தல்; இரவு 7-30 மணி: கும்பகோணம்—பொதுக் கூட்டத்தில் பேசுதல்.

## சிட்லபாக்கம் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

“25—10—72 இரவு 8 மணிக்கு சிட்லபாக்கம் தி.மு.க. பொது உறுப்பினர்கள் அவசரக் கூட்டம், அவைத் தலைவர் இரா. சீதாபதி தலைமையில், ஊராட்சி ஒன்றியப் பள்ளித் திடலில் நடைபெறும்; அதுபோது, கழகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் -- செயல் முறைகள் பற்றியும், மற்றும் பல பிரச்சினைகள் பற்றியும் ஆய்வு செய்யப்படும்; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்”

என்று செயலாளர் த. சக்ரபாணி அறிவிக்கிறார்.

# ‘ஓட்டுக் காங்கிர’சார் அட்டூழியம்

★

## பொதுக்குழு விளக்கக் கூட்டங்களில் வெறியாட்டம்

★

### அமைச்சர் மீது கல்லெறி -- தீ வைப்பு

சென்னை, அக். 23—

தமிழ்நாடு முழுவதிலும் நேற்று நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டங்களில் கலவரம் ஏற்படுத்தும் முயற்சிகளில் -- பல ஊர்களில் ‘ஓட்டுக் காங்கிர’சைச் சேர்ந்த வன்முறையாளர்கள் முயன்றிருக்கின்றனர்.

இராமநாதபுரம், மதுரை, கோவை, தர்மபுரி, கடலூர் ஆகிய ஊர்களில் அவர்கள் திட்டமிட்டுக் குழப்பம் விளைவித்திருக்கின்றனர்,

### இராமநாதபுரத்தில்

இராமநாதபுரம் அரண்மனைவாயில் முன் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள் கலந்துகொண்டார்; திரு. சத்தியேந்திரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்; கூட்டம் தொடங்கியதும், ‘எம். ஜி. ஆர். ரசிகர்கள்’ என்பவர்கள், கூட்ட மேடையை நோக்கிச் சரமாரியாகக் கற்களை வீசத் தொடங்கினர்; மேடையில் அமர்ந்திருந்த அமைச்சர் மன்னை நாராயணசாமியின் நெற்றியின் வலதுபுறத்தில் கல் ஒன்று பட்டதால் காயம் ஏற்பட்டது; அவருக்கு அருகிலிருந்த சிவகங்கை தா. கிருஷ்ணன் எம்.பி.-க்கு மண்டையில் காயம் ஏற்பட்டு இரத்தம் கொட்டியது.

கலவரம் செய்தவர்களைப் போலீசார் பலமுறை எச்சரித்தும் பலன் ஏற்படாததால், அமைதியை நிலைநாட்டப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; பின்வாங்கிய கூட்டத்தினர் போலீசார் மீது கல்வீசத் தொடங்கினர்; இதனால் போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கூட்டத்தைக் கலைத்தனர்.

அமைச்சருக்கும் -- தா. கிருஷ்ணனுக்கும் இராமநாதபுரம் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அப்துல் ரசாக் ஆகியோரும் காயமடைந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் உலகநம்பி பேசுகையில் சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டதால் மேடையில் கட்டப்பட்டிருந்த ‘டியூப் லைட்’டுகள் உடைந்தன.

கோட்டை மைதானத்தையொட்டி உள்ள அண்ணா கலை அரங்கம் அருகில் வன்முறையாளர்களைக் கலைக்க கண்ணீர்ப் புகை வீசப்பட்டது.

வன்முறையில் ஈடுபட்டவர்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்து, நகரின் பல்வேறு பகுதிகளில் கலவரத்தில் ஈடுபட்டனர்; கல்வீச்சு, தீவைப்புப் போன்ற சம்பவங்கள் நடந்தன.

### வேலூரில்

வேலூரில் தி. மு. க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் கோட்டை மைதானத்தில் மாலை 6-மணிக்கு தொடங்கியது; கூட்டத்துக்கு தலைமை தாங்கும்படி மேலவை உறுப்பினர் வி. எம். தேவராஜ் பெயரை முன்மொழிந்து நகர செயலாளர் பி. நடராசன் பேசினார்; அதுபோது, ‘எம். ஜி. ஆர். ரசிகர்கள்’ என்பவர்கள் கூச்சல் போடத் தொடங்கினர்; மேடையை நோக்கி கல் வீசினர்.

கல் வீசியவர்களைக் கலைக்கப் போலீசார் தடியடி நடத்தினர்; அப்படியும் கல வீச்சு நீடித்தது.

கல்வீச்சினால் மேடையில் இருந்தவர்கள் காயமடைந்தனர்; அல்லாபுரம் ஊராட்சித் தலைவர் என். சுப்பிரமணியம் தலையில் கல் பட்டு இரத்தம் கொட்டியது.

எஸ். முருகையன் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர்

### திருத்தணியில்

திருத்தணியில் நடந்த கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சட்டமன்ற உறுப்பினர் கா. வேழவேந்தன், பரந்தாமன் ஆகியோர் காரில் சென்றனர்.

திருத்தணியில் கூட்டம் நடக்கும் இடத்திற்கு அருகே அவர்கள் காரிலிருந்து இறங்கியவுடன், அவர்களை எம். ஜி. ஆர். ரசிகர்கள் சூழ்ந்துகொண்டனர்; எம். ஜி ஆர். வாழ்க’ என்று கோஷம் போட்டுக்கொண்டே காரின்மீது கல் வீசினர்.

போலீசார் விரைந்து வந்து வேழவேந்தனையும் -- பரந்தாமனையும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வேழவேந்தனின் காருக்குத் தீவைத்தனர்; கார் முழுவதும தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டது.

கூட்டம் நடத்துவதற்காகப் போடப்பட்டிருந்த மேடையை நொறுக்கினர்; மின்சார பல்புகள் உடைக்கப்பட்டன; மேடையில் அமர்ந்திருந்த சிலருக்குக் காயம் ஏற்பட்டது.

### தர்மபுரியில்

தர்மபுரியில் நடைபெற்ற கூட்டத்தில், முரசொலி மாறன் பேசினார்; கூட்டம் முடிந்ததும், அங்கிருந்து காரில் புறப்பட்டுச் சென்றார்.

வழியில் எம். ஜி. ஆர். ரசிகர்கள் மாறன் கார் மீது கல்வீச்சு நடத்தினர்; இதனால், காரின் கண்ணாடி உடைந்தது; இதைப் பார்த்ததும், பொதுமக்கள் திரண்டு வந்து -- எம். ஜி. ஆர். ரசிகர்களை அடித்து விரட்டினர்.

முன்னதாக தர்மபுரி பழைய பஸ் நிலைய மைதானத்தில் கூட்டம் நடந்தபோதும், எம். ஜி ஆர். ரசிகர்கள் கூச்சல் போட்டு கலாட்டா செய்தனர்; இடையிடையே கல்வீச்சும் நடந்தது; ஆனால், யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

### கடலூரில்

கடலூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டுக் கண்ணீர்ப் புகை வீசப்பட்டது.

கூட்டத்துக்கு வட்ட செயலாளர் ஏ. வி. தண்டபாணி தலைமை தாங்கினார்; அமைச்சர் என். வி. நடராசன, மாவட்டச் செயலாளர் செல்வராசு எம்.எல்.ஏ., கடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பாபு கோவிந்தராசன், நகரச் செயலாளர் கி. கோவிந்தராசன், நகராட்சித் தலைவர் சுப்பிரமணியம், சாம்பசிவம் எம்.எல்.சி. உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்திலிருந்தே எம். ஜி ஆர். ரசிகர்கள் கூச்சல் போட்டுக் குழப்பம் செய்தனர்; மேடையை நோக்கிக் கற்களை வீசினர்.

போலீசார் எச்சரித்த பிறகும் கல்வீச்சு நீடித்ததால், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்துக் கலவரக்காரர்களைக் கலைத்தனர்; பிறகு கூட்டம் நடைபெற்றது.

### மதுரையில்

மதுரை திலகர் திடலில் நடந்த கூட்டத்தில் எம். ஜி ஆர். ரசிகர்கள் கூச்சல்போட்டு கலாட்டா செய்தனர்; போலீசார் அமைதி ஏற்படுத்திய பிறகு அமைச்சர் க. அன்பழகன், மேயர் எஸ். முத்து, எம். இராஜாங்கம் எம.பி. ஆகியோர் பேசினர்.

அங்கிருந்து விரட்டப்பட்ட எம். ஜி.ஆர். ரசிகர்கள் மேல மாசி வீதி—வடக்கு மாசிவீதி சந்திக்கும் இடத்தில் சோடாப் புட்டிகளை வீசிக் கலவரம் செய்தனர்.

தெற்கு வெளிவீதியிலுள்ள நகர தி.மு.க. செயலாளரும் -- சட்டமன்ற உறுப்பினருமான கு. திருப்பதியின் வீட்டின் மீது கற்களை வீசினர்.

இராஜா மில் சாலையில் லூர்துசாமி என்ற ஓட்டல் தொழிலாளி கத்தியால் குத்தப்பட்டார்.

### கோவையில்

கோவையில் நடந்த கூட்டத்தில், கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் பேசினார்; கூட்டத்திலிருந்த ஒரு பகுதியினர் இடையிடையே கூச்சலிடத் தொடங்கினர்; அவர்களைப் போலீசார் விரட்டினர்; பிறகு கூட்டம் அமைதியாக நடந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், [illegible] [illegible] வெளியிடப்படுகிறது.